பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 15 | வெள்ளிக்கிழமை | 28.06.2024 | அதிர்வு 332

## விசர்நாய் கடித்து கிளிநொச்சி சிறுமி பரிதாப உயிரிழப்பு

விசர்நாய்க் கடிக்கு இலக்காகி நான்கு வயது சிறுமி ஒருவர்

06



# நாட்டுக்குச் சாபமாக மாறியுள்ள எதிரணிகள்; தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## அமைச்சர் பிரசன்ன கூறுகின்றார்

எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் தேர்தலில் மக்கள் உரிய பாடம் புகட்டுவார்கள் என்று தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இந்த எதிர்க்கட்சிகள் உண்மையில் நாட்டுக்கே சாபக்கேடு என்றும் குறிப்பிட்டார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கம்பஹா மாவட்ட முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நேற்று உடுகம்பலையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

04

## அடுத்த ஆட்சி மாற்றத்தோடு மலையகமும் மாற வேண்டும்

### ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியுடனான சந்திப்பில் மனோ எம்.பி. தெரிவிப்பு



ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அந்திரேவுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான தூதுக்குழுவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போது, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார்

06



'சபாஷ்! சரியான போட்டி!' – என்ற 'வஞ்சிக் கோட்டை வாலிபன்' பட வசனம் போல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அச்சுறுத்தும் கருத்துக்கு அதே பாணியில் சரியான பதிலடி கொடுத்திருக்கின்றார் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின்.

'ஆசிரியர்கள் காலையில் மாணவர்களுக்குப் போதிப்பதற்கு வகுப்பறைக்குச் செல்லாவிட்டால் ஆசிரியர் சேவையையும் அத்தியாவசிய சேவையாக அறிவித்து விடுவேன்!' – என்று மிரட்டும் தொனியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிட்டார் என்ற செய்தி வெளியான கையோடு – சூட்டோடு சூடாக – பதிலடி கொடுத்து விட்டார் ஜோசப் ஸ்டாலின்.

06

# இணைய நிதிமோசடியில் ஈடுபட்ட இந்தியர்கள் உட்பட 60 பேர் கைது

30 இந்தியர்கள் உட்பட 60 சந்தேக நபர்களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இணையத்தில் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்தேகநபர்கள் தலங்கம, மாதிவெல மற்றும் நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# ஆசிரியர்கள் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் தயங்கோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



"பிள்ளைகளின் கல்விக்காக காலை வேளையில் ஆசிரியர்கள் பாடசாலைகளில் இருக்க வேண்டியது கட்டாயமானது. எதிர்வரும் நாள்களில் அவ்வாறு நடக்காமல் போனால் ஆசிரியர் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் ஸ்ரீவரகாகொட ஞானரதன தேரரை நேற்று சந்தித்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஆசிரியர்களும், அதிபர்களும் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டும். அவர்கள் போராட்டங்களிலும், வேலைநிறுத்தங்களிலும் ஈடுபடும் போது, எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கு அவர்களால் எவ்வாறு அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும்?

ஒட்டுமொத்தமாக ஆசிரியர் சேவையிலிருக்கும் சகலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுக்கவில்லை. அரசியல் சார்ந்தவர்களே இதில் பங்கெடுத்திருக்கின்றனர் என எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனால் ஒட்டுமொத்த ஆசிரியர் தொழிலுக்கும் களங்கம் ஏற்படும்.

சிங்கள பாடசாலைகளுக்குள் மாத்திரமே இந்த பணிப்புறக்கணிப்பு காணப்படுகின்றது. தமிழ், முஸ்லிம், தனியார் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் வழமைபோல நடைபெறுகின்றன.

பாடசாலையின் பாதுகாவலர்கள் மாணவர்களைத் திருப்பி அனுப்புகின்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

பாரம்பரிய அரசியல் பிரிவினைகளுக்கு அமைய செயற்படுவதன் மூலம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. அரசியல் ரீதியாக பிரிந்து செயற்பட்டிருந்தால் இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்திருக்க முடியாது. நாட்டை தற்போதைய நிலைக்குக் கொண்டு வர நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளையும் சேர்ந்தவர்கள் எமக்கு ஆதரவளித்தனர்.

மேலும் எதிர்க்கட்சியிலும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். முழு நாடாளுமன்றமும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டிருந்தால் ஒரு நாடாக நாம் சிறந்த பெறுபேறுகளை அடைந்திருக்க முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் இணையுமாறு நாடாளுமன்றத்தில் உள்ள அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். இன்று உலக அரசியல் மாறிக்கொண்டிருக்கிறது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள முக்கிய கட்சிகள் பிளவடைந்துள்ளன. எனவே, இலங்கையின் பிரதான கட்சிகள் பிளவுபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம். ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஒரு கிராமத்தில் நான்குக்கும் மேற்பட்ட அரச அதிகாரிகள் இருந்தாலும், பொருளாதாரத்தில் அவர்களின் பங்களிப்பு பெரிதாக இல்லை. தெங்கு தொடர்பான நிறுவனம் இருந்த போதிலும், இலங்கையின் தெங்கு உற்பத்தி குறைந்துதான் செல்கிறது. ஆனால், கேரளாவில் தெங்கு உற்பத்தி அதிகரித்து வருகிறது.

அவர்கள் வேகமாக ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்கின்றனர். எமது மகாவலி வலய அலுவலகங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் இயங்கினாலும் மகாவலி வலயமானது ஒரு ஹெக்டேயருக்கு மூன்று மெட்ரிக் தொன் விளைச்சலையே பெறுகிறது.

50 வருடங்களில் பெருந்தோட்டக் கைத்தொழில் மூலம் இந்தியா, சீனா போன்ற நாடுகள் பெரும் பொருளாதார நன்மைகளை அடைந்துள்ளன. வெள்ளையர் காலத்தில் தேயிலை, தெங்கு, இறப்பர் பொருளாதாரம் காணப்பட்டது. அதன் பின்னர் 1977களில் திறந்த பொருளாதாரத்துடன் உருவாக்கப்பட்ட ஆடை உற்பத்தித் துறை இல்லையென்றால் நாட்டின் பொருளாதாரம் இன்னும் சரிவடைந்திருக்கும்.

கடலாதெனியா, லங்காதிலக மற்றும் அம்பக்கே விகாரைகளை இணைந்து சுற்றுலா வலயமொன்றை உருவாக்கவுள்ளோம். அதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பௌத்த நாகரீக நிலையத்தை உருவாக்கி பெருமளவிலான சுற்றுலாப் பயணிகளை இந்த கண்டி பிரதேசத்திற்கு வரவழைக்க எதிர்பார்த்துள்ளோம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகை, உடவத்த கெலே வனப்பூங்கா மற்றும் விக்டோரியா அணைக்கட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கண்டியிலும் சில நாள்களை கழிப்பர்.

கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் போகம்பர சிறைச்சாலை அமைந்துள்ள பகுதியை ஹோட்டல் வளாகமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், நகரின் நிர்வாகப் பணிகளை குண்டசாலைக்கு மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. திகன பிரதேசத்தில் தொழிநுட்ப வலயமொன்றை அமைப்பதன் ஊடாக இப்பிரதேசத்தில் தொழில்நுட்ப மேம்பாட்டை ஏற்படுத்த முடியும்.

கண்டி – கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையின் கொழும்பு முதல் மீரிகம வரையிலான பகுதியை சீனாவின் உதவியோடும், குருநாகலிலிருந்து கண்டி வரையிலான பகுதியை ஜப்பானின் உதவியுடன் நிறைவு செய்வது குறித்தும் தற்போது ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும், நவீன விவசாயத்தை கிராமத்திற்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக செய்வதற்கும் உங்களுடைய ஆதரவை தேவைப்படுகிறது."– என்றார்.



# அரச ஊழியர் சம்பள அதிகரிப்புக்கான முறைமையொன்று ஆரம்பிக்கப்படும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

“சம்பள பிரச்சினைகள் ஏற்படாதவாறு அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கான முறைமையொன்று அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படும். அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து தற்போதும் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது. அதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மல்வத்து மகா விகாரைக்கு நேற்று சென்ற ஜனாதிபதி, மல்வத்து பீடத்தின் மகா நாயக்க தேரர் வண. திப்படுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரை சந்தித்து ஆசிபெற்றுக்கொண்டார்.

நேற்று முன்தினம் ஆற்றிய விசேட உரையின் பின்னர் முதல் முறையாக மகா நாயக்க தேரர்களைச் சந்தித்த ஜனாதிபதி, அரசாங்கத்தின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்தும் அவர்களுக்கு விளக்கமளித்தார்.

அதனையடுத்து கண்டி பெருநகர அபிவிருத்தி திட்டத்தையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மல்வத்து மகாநாயக்க தேரர்களிடம் கையளித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துமாறு மகாநாயக்க தேரர்கள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நான் ஆட்சியை பொறுப்பேற்ற வேளையில் மல்வத்து விகாரைக்கு வந்திருந்தேன். அதன்போது நீங்கள் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நாட்டின் ஆட்சியை நெறிப்படுத்தி இன்று வங்குறோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளோம். அந்தத் தகவலை உங்களுக்குச் சொல்லவே இன்று இங்கு வந்தேன். வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான இரண்டு இணக்கப்பாடுகளையும் எட்டியுள்ளோம்.

ஆசிரியர்களுக்கு அடுத்த வருடத்திலிருந்தே சம்பள அதிகரிப்பை வழங்க முடியும். அது குறித்து நாம் அவர்களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறோம். அதேபோல் ஏனைய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக் குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் ரூ 3,000 ரூ.17,000 வரையிலான சம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் இவ்வருடத்திலும் 10,000 ரூபா சம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ரூ. 13,000 – 27,000 வரையில் ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதனால் ஏனைய அரச ஊழியர்கள் குறித்தும் ஆலோசிக்க வேண்டும்.

இவ்வேளையிலும் தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் இயங்குகின்றன. சிங்கள பாடசாலை ஆசிரியர்கள் மட்டுமே இவ்வாறான தொழிற்சங்கச் செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர். எவ்வாறாயினும் சம்பள விடயம் தொடர்பில் அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கிறது. அதன்படி 2025 ஆம் ஆண்டிலிருந்து அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கான சரியான முறைமையொன்றை செயற்படுத்த எதிர்பார்ப்பதோடு, அது குறித்து ஆராய்வதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

கண்டி அபிவிருத்தி திட்டத்துக்கமைய நிர்வாக நகரத்தை குண்டசாலைக்கு கொண்டுச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். இந்திய ஜஐவு பல்கலைக்கழகத்தினை கண்டியிலும் ஸ்தாபிக்க பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறோம். பேராதனை பல்கலைக்கழகத்திற்கு புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும். இவற்றுக்கு மத்தியில் அஸ்வெசும, உறுமய திட்டங்கள் ஊடாக மக்களுக்கும் நிவாரணங்களை வழங்குகிறோம்.”– என்றார்.



# நாட்டுக்குச் சாபமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் கூறுகையில்,

“ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் எதிர்க் கட்சிகள் வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. அரச அதிகாரம் பெறுவதற்கு முன்பிருந்தே பொதுமக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வேலை நிறுத்தம் செய்து வரும் ஒரு கும்பல், ஆட்சி அதிகாரம் கிடைத் தால் என்ன செய்வார்கள் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

இப்படிப்பட்டவர்களிடம் இருந்து நல்ல எதிர்காலத்தை மக்கள் எதிர்பார்க்க முடியாது. தற்போது சம்பளத்தை அதி கரிக்க முடியாது. 2024 வரவு – செலவுத் திட்டத்தில் அதற் கான ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.

ஆனால், அடுத்த வருடம் முதல் சம்பளத்தை அதிகரிப்ப தற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி தொழிற்சங்கங்களுக்கு அறிவித்துள்ளார். அரசு என்ற ரீதியில் நாம் அவ்வாறு கூறினாலும் அவர்கள் அதே இறைச்சியை, இறாத்தலையே கேட்கின்றனர்.

கடனை மறுசீரமைக்க கடன் வழங்குபவர்களுடன் இலங்கை ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. இது ஒரு நாடாக எமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். நாம் எதிர்கொள்ளும் பொரு ளாதார நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைத்து வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வோம் என்பதை இந்த ஒப்பந்தம் உறுதிப் படுத்தியது. இந்த உடன்படிக்கையின் மூலம், நாம் இப் போது வெளிநாட்டுக் கடன்களை செலுத்தும் திறன் கொண்ட நாடாக இருப்பதை கடன் வழங்குனர்கள் ஏற்றுக்கொள்கின்ற னர்.

நாடு வங்குரோத்து ஆனதாக அறிவித்த பிறகு, நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அரசு மீண்டும் நிறைய நடவடிக்கைகளை எடுத்தது. வெளிநாட்டுக் கடனை மறுசீர மைக்க கடன் கொடுத்த தரப்பினரை ஒப்புக்கொள்ளச் செய் ததே நமது நாட்டின் மிகப்பெரிய சாதனையாகும். அதற்காக இரண்டு வருடங்கள் பேச்சு நடத்த வேண்டியிருந்தது.

கொரோனாத் தொற்றுநோய் நிலைமை மற்றும் போராட்டத் தால், நமது பொருளாதாரம் சரிந்தது. நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் அப்படியே நிறுத்தப்பட்டன. எனவே, கடந்த காலத் தில் மிகவும் கடினமான காலகட்டத்தை எதிர்கொண் டோம்.

அந்தச் சிரமங்களை மக்கள் மிகுந்த நிதானத்துடன் பொறுத்துக்கொண்டனர். இதன் விளைவாக, அரசு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் அந்நியச் செலாவணி கையி ருப்பைக் குவிக்க முடிந்தது. இப்போது மீண்டும் தேவைக்கு ஏற்ப சர்வதேச கடன்களைப் பெற முடிகின்றது. இதன்படி, இதுவரை நிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்கவும், புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக் கவும் வாய்ப்பு ஏற்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொரு ளாதார சீர்திருத்த வேலைத்திட்டம் காரணமாக நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைத்த இந்த விரைவான வெற்றிகளை எதிர்க் கட்சிகளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் எப்போதும் இந்த நாட்டில் பாசாங்குத்தனம் மற்றும் பொறாமையின் அடிப்படையி லேயே அரசியல் செய்கிறார்கள். இந்தக் கடினமான நேரத் தில், அவர்கள் வேலைநிறுத்தம் செய்து நாட்டின் அனைத்து குடிமக்களையும் கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாக்கு கின்றார்கள். இந்த வேலைநிறுத்த மாபியாவால் நாட்டின் முன்னேற்றத்தை மாற்ற முடியாது.

சந்திகளில் கூட்டங்களை நடத்தி மக்களுக்குப் பொய்யான வீண்பேச்சுக்களை விட்டுச் செல்லும் எதிர்க்கட்சிக்கு பொருளா தார தீர்வே இல்லை. அந்தத் தோல்வியால்தான் நாங்கள் கோரிக்கை விடுத்தாலும் எதிர்க்கட்சிகள் நாட்டைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. இந்தப் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்த தருணத்திலி ருந்து எதிர்க்கட்சிகள் வன்முறையை விதைத்து வேலை நிறுத்தங்களை ஆரம்பித்து வருகின்றன. இந்த விளை யாட்டை இப்போது நிறுத்த வேண்டும். இந்த எதிர்க்கட்சிகள் உண்மையில் நாட்டுக்கே சாபக்கேடு. நாட்டுக்குச் சாபமாக மாறியுள்ள இந்த எதிர்க்கட்சிகள் குறித்து எதிர்வரும் தேர் தலில் மக்கள் இறுதித் தீர்மானம் எடுப்பார்கள்.” – என் றார்





### மட்டக்களப்பில் அபிவிருத்தி என்ற போர்வையில்

# பெரும்பான்மை சமூகத்தினரின் ஆதிக்கத்தை அதிகரிக்கும் வேலைத்திட்டமே முன்னெடுப்பு

## சாணக்கியன் எம்.பி. பகிரங்கம்

(பழுவூரான்)

அபிவிருத்தி என்ற போர்வையில் எமது மாவட்டத்தில் பெரும்பான்மை சமூகத்தின் ஆதிக்கத்தை அதிகரிக்கின்ற வேலைத்திட்டமே முன்னெடுக்கப்படுகின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

அவரது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் களுவாஞ்சி குடிப் பகுயில் அமைந்துள்ள இந்து ஆலயங்களுக்கு வழங் கப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங் களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:–

"எமது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாக ஆலயங்களின் புனரமைப்புக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி மிகவும் குறைவான தொகையாகவே காணப்படுகின்றன.

இலங்கையில் இந்து காலாசாரத்துக்கென ஒரு அமைச்சு இல்லாத நிலைதான் காணப்படுகின்றது.

ஆனால், பௌத்த மதம் உள்ளிட்ட ஏனையவற்றுக்கு அமைச்சுக்கள் உள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலே சைவ சமய வழிபாட்டைப் பின்பற்றுபவர்கள் அதிகமாக உள்ள நிலையில் வழிபாட்டுத் தலங்களைக் கட்டியெழுப்புவதற்காக அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி மிகவும் குறைவாகதா கவே காணப்படுகின்றது.

மட்டக்களப்புமாவட்டத்தின்வடமுனை, குடும்பிமலைபோன்ற எல்லைப்புறக் கிராமங்களிலே விகாரைகள் அமைக்கும் பணிகள் மிகவும் ஆடம்பரமாக இடம்பெற்று வருகின்றன.

இதன்படி ஊத்துச் சேனை, வடமுனை, குடும்பிமலை ஆகிய பகுதியில் அமைந்துள்ள நெல்கல்மலை எனும் இடத்திலே இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அங்கு புதிய விகாரை ஒன்றை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இது தொடர்பில் சுமார் இரண்டு வருடங்களாக பிரதேச மட்டம், மற்றும் மாவட்ட மட்ட கூட்டங்களின்போது கேள்வி எழுப்பினேன். இந்நிலையில், ஒரு சிங்கள குடிமகன் வாழாத பிரதேசத்தில் விகாரை அமைப்பதற்கு என்ன தேவை இருக்கின்றது என்று கேள்வி எழுகின்றது. ஆனாலும் கோடிக்கணக்கான செலவில் அங்கு விகாரை அமைத்துக் கொண்டிருக்கின்றனர்." – என்றார்.










## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"இந்தச் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்க முன்னர், பாடசாலைகளுக்கும் பிள்ளைகளுக்கும் அத்தியாவசிய தேவையான அடிப்படைகளை செய்து கொடுத்துவிட்டு சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கச் சொல்லுங்கள்!" – என்று ஜனாதிபதிக்குக் காட்டமாக – அப்பட்டமாக – சவால் செய்தி அனுப்பி இருக்கின்றார் அவர்.

இந்த ஆசிரிய பணிப் பரிஷ்கரிப்புப் போராட்டம் சிங்களப் பாடசாலைகளில் தான், தமிழ் – முஸ்லிம் பாடசாலைகளில் இல்லை என்ற ஜனாதிபதியின் கூற்றையும் ஜோசப் ஸ்டாலின் கண்டித்து இருக்கிறார்.

வடக்கில் பெரும்பாலும் பாடசாலைகள் அநேகம் இரண்டு நாள்களாக முழுமையாக இயங்கவில்லை என்பதுதான் உண்மை நிலை. கிழக்கில் சுகவீன லீவுப் போராட்டம் சில இடங்களில் குறிப்பிடத்தக்களவு வெற்றி அளிக்கவில்லை என்பதும் உண்மைதான்.

ஆசிரியர் சங்கம் நேற்று முன்தினம் தான் – ஒரு நாள் மட்டுமே – போராட்டம் என்று முதலில் அறிவித்திருந்தது. திடீரென்று நேற்று முன்தினம் பிற்பகலில்தான் நேற்றும் போராட்டம் என்று அறிவித்தது. அதனால் சில பாடசாலைகளில் குழப்பங்கள் ஏற்பட்டன என்பதும் உண்மையே.

ஆசிரியர் சங்கப் போராட்டம் காரணமாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சுமார் 80 வீதமான ஆசிரியர்கள் சுகவீன விடுமுறை எனப் பாடசாலைகளுக்கு தந்தி அனுப்பிவிட்டு விடுமுறையில் நின்றனர்.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் நீண்ட காலமாகப் பணியாற்றி ஓய்வில் செல்லும் ஆசிரியருக்கு நேற்றைய தினம் பிரியாவிடை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் மாலையில் திடீரென சுகவீனப் போராட்டம் நேற்றும் நடைபெறும் என தகவல் வந்தது. அதனால் பலருக்கும் குழப்பம். ஆசிரியர் போராட்டத்தைக் காட்டி கொடுக்க முடியாது. அதிபர் முதல் ஆசிரியர் வரை அனைவருமே சுகவீனம் என அறிவித்துவிட்டு பாடசாலைக்கு காலையில் வரவில்லை. ஆனால் மதியம் 12 முதல் 2 மணி வரை பிரியாவிடை மதிய விருந்துடன் நடந்து முடிந்தது. நால்வரைத் தவிர 60 வரையான ஆசிரியர்கள் பிரியாவிடையில் பங்குபற்றினர்.

ஆயினும் எவரும் கல்லூரி வரவுப் பதிவில் ஒப்பமிடவில்லை. சட்டப்படி சுகவீன லீவில் நின்றபடி, தார்மீகப்படி பிரியாவிடையில் பங்குபற்றினர்.

இறுதி நேரத் திடீர்ப் போராட்ட அறிவிப்புக்களினால் இப்படி பல குளறுபடிகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது தான்.

## விசர்நாய் கடித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, குமாரசாமிபுரத்தைச் சேர்ந்த மேற்படி சிறுமி விசர்நாய்க் கடிக்கு இலக்கான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், அந்தச் சிறுமி சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

## அடுத்த ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி/ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் எம். பரணிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்குக் கருத்துக் கூறியபோது தெரிவித்தாவது,

"நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை உட்பட கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகலை ஆகிய மாவட்டங்களில் பரந்து விரிந்துள்ள பெருந்தோட்ட பிரதேசங்களில், நவீன அடிமைத்துவ அம்சங்களுக்கு மத்தியில், மலையக சமூக குடும்பங்கள் வாழ்கின்றன. இம்மக்களுக்கு பெருந்தோட்ட நிலங்களில், வதி விட காணி உரிமை, வாழ்வாதார காணி உரிமை உள்ளிட்ட உரிமைகளைப் பெற்றுத் தந்து அவர்களை இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக்கும் கொள்கையை தமிழ் முற்போக்குக் கூட்டணி முன்னெடுக்கின்றது.

அடுத்து வரும் ஆட்சி மாற்றத்தை அடுத்து, இது ஒட்டுமொத்த பெருந்தோட்டத் துறையிலும் முறை மாற்றமாக பரிணமிக்க வேண்டும். அதற்கான முன் தயாரிப்பு பணிகளில் நாம் இன்று ஈடுபட்டுள்ளோம். இந்த விவகாரங்கள் தொடர்பான உள்நாட்டு அரசியல் சட்டவாக்க நடவடிக்கைகளை தமிழ் முற்போக்குக் கூட்டணி மேற்கொள்ளும். அதற்கான பலம் மற்றும் தூரப்பார்வை எம்மிடம் உள்ளது. அடுத்த ஆட்சி மாற்றத்துக்கு உள்ளே சென்று திட்டங்களை வகுப்பதை விட, முன் கூட்டியே முன் தயாரிப்பு நடவடிக்கைகளில் தற்போது நாம் ஈடுபட்டுள்ளோம்.

இந்த விவகாரம் தொடர்பில் மலையக சிவில் சமூகத்துடனும் நாம் தற்போது கலந்துரையாடுகின்றோம். மக்கள் ஆணை கொண்ட அரசியல் பிரதிநிதிகளுடன் இணைந்து பணியாற்றக் கூடிய மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பற்றியும் நாம் வெகுவிரைவில் சர்வதேச சமூகத்துக்கு அறிவிப்போம். ஐ.நா. நிறுவனங்களான உணவு விவசாய நிறுவனம், யுனிசெப், உலக உணவு நிறுவனம் ஆகியவை ஊடாக எமக்குத் தொழில்நுட்ப, அபிவிருத்தி, ஒத்துழைப்புகளை வழங்க ஐ.நா. முன்வர வேண்டும் என்ற கோரிக்கையையும் நாம் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அந்திரேயிடம் முன்வைத்துள்ளோம். எமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஆவன செய்வதாக உறுதி அளித்தார்." – என்றார்.





# வெள்ள நிலைமை ஏற்பட்டமை தொடர்பில் 2 வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவும்

## கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்து அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் அறிக்கை கோருமாறும், அந்த அறிக்கைகளின் அடிப்படையில் ஆரம்ப அறிக்கையைத் தயாரித்து இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

அதன் பிரகாரம், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடி இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான திட்டங்களை உடனடியாகத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

மோசமான காலநிலை காரணமாக கொழும்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலைமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்குத் தீர்வுகாண்பதற்காக துறைசார் நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் சேதமடைந்த பகுதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அந்தப் பிரதேச அரசியல் பிரதிநிதிகள் நேரில் சென்று அவதானித்தனர் எனவும் இயற்கை காரணங்களைப் போன்று, ஒழுங்கற்ற மனித செயற்பாடுகளும் வெள்ள நிலைமை ஏற்படக் காரணமாக உள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்காலத்தில் மீண்டும் இதுபோன்ற வெள்ள



நிலைமை ஏற்படாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்களை விரைவாக தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த, நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம். நபீல், துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் வெள்ள நிலைமையை எதிர்கொண்ட பிரதேசவாசிகள் சிலரும் கலந்துகொண்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# குழம்பி நிற்கும் ரணில்

இப்பத்தியில் ஏற்கனவே நாம் சுட்டிக் காட்டியபடி கடன் வழங்கிய நாடுகளுடனான கடன் மீளளிப்பு ஏற்பாடுகளுக்கான மறுசீரமைப்பு உடன்படிக்கையை தமது அரசின் பெரும் சாதனையாக நீட்டி முழக்கும் வேலையை கனகச்சிதமாகத் தொடங்கி விட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பௌத்த மகா சங்கங்களின் மகா நாயக்கர்களை ஒவ்வொருவராகப் போய்ச் சந்தித்து, தாம் ஏதோ சாதனை படைத்து விட்டு வந்த வீரனைப் போல அந்தச் சாதனைகளுக்கு வாழ்த்தும் ஆசியும் பெறுபவராகப் பீற்றிக் கொள்கின்றார் ஜனாதிபதி விக்கிரமசிங்க.

ஆனால் அவரின் இந்த எடுப்பு நாட்டில் பெரிதாக எடுபடவில்லை என்பதுதான் களநிலைமையாக உள்ளது.

இதனைப் பெரும் சாதனையாக அவரும் அவரது அரசுப் பங்காளிகளும் புளுகினாலும் கூட - கயிறு விட்டாலும் கூட - அவர்கள் மட்டில், அத்தகைய சாதனைக்குப் பின்னரும் கூட, வரும் ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பேன் என்று பகிரங்கமாக ரணில் விக்கிரமசிங்கவினால் இன்னும் பிரகடனப்படுத்த முடியவில்லை என்பதுதான் உண்மை.

ஜனாதிபதி தேர்தலுக்கு ஆக 100 நாள்கள் இருக்கையில் கூட அப்படி பகிரங்கமாக அறிவிப்பதற்கான துணிச்சலும், தன்னம்பிக்கையும், உறுதியும் அவருக்கு இன்னும் பிறக்கவில்லை என்பதுதான் இந்த நிலைமையின் தாற்பரியம் ஆகும்.

தற்போதைய ஜனாதிபதிப் பதவியை மேலும் ஓராண்டுக்கு நீடிக்கும் அவரது கபடத்தனமும் உருக் கொள்ளாமலேயே கருகி விட்டதாகக் கூறப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் அதற்குத் தேவையான மூன்றிலிரண்டு பங்கு ஆதரவை திரட்டுவது துர்லபம் என்று உணர்ந்தமையாலும், அத்தகைய அரசமைப்புத் திருத்தத்தை செய்வதற்கு இனிமேல் போதிய கால அவகாசம் இல்லை என்பதனாலும், அவ்வாறான முயற்சிக்கு எதிராக நாட்டில் எழக்கூடிய அரசியல் கிளர்ச்சி கருதியும், அந்த முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைவிட்டு விட்டார் என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த விடயத்தை ஒட்டி இதுவரை சட்டமா அதிபராக இருந்த சஞ்சய் ராஜரத்தினத்தை அவரின் ஓய்வுக்கான வயதில் பின்னரும் ஆறு மாதங்களுக்கு பதவியில் நீடித்து வைத்திருக்கவும், அதன் பின்னர் அவருக்குப் பிரதம நீதியரசர் பதவியை வழங்கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீட்டிய திட்டம் சறுக்கிவிட்டது என்றும் தெரிகிறது.

அரசமைப்புக் கவுன்ஸில் இறுக்கமாக - உறுதியாக - நின்று அந்தப் பதவி நீடிப்புக்கு ஆப்படித்து விட்டது. பொலிஸ்மா அதிபர் நியமனம் போல இதில் ஜனாதிபதியினால் குளறுபடி பண்ண முடியவில்லை. அதற்கு முன்னரே தம் நிலைமையை உணர்ந்து, இதுவரை சட்டமா அதிபராக இருந்த சஞ்சய் ராஜரத்தினம் தாம் ஓய்வு பெற்றுச் செல்கின்றார் என்பதை பகிரங்கப் படுத்தி, இவ்விடயம் தொடர்பில் எழக்கூடிய அர்த்தமற்ற பேச்சுக்கள், முறையற்ற விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கச் செய்துவிட்டார்.

இப்போது நாட்டின் சட்டமா அதிபர் யார் என்பது இதுவரைப் பொதுமக்களுக்கு தெரியாது. பதில் சட்டமா அதிபர் ஒருவர் கூட இன்னும் நியமனம் செய்யப்படவில்லை.

இனி ஒருவரை ஜனாதிபதி, சட்டமா அதிபர் பதவிக்கு புதிதாகப் பரிந்துரை செய்து, அதன் பின்னர் அரசமைப்புக் கவுன்ஸில் கூடி, அந்தப் பெயர் குறித்துத் தீர்மானிக்கும் வரை நிரந்தர சட்டமா அதிபரே இல்லாத நாடாகத்தான் இலங்கை இருக்கப் போகின்றது.

அது ஒருபுறம் என்றால், ரணில் விக்கிரமசிங்க வரும் ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவாரா, இல்லையா என்ற சந்தேக - குழப்ப - நிலை நீடிப்பதால், அவருடன், அவருக்காக அணி சேர்ந்து இருக்கும் எம்.பிக்கள், பிரமுகர்கள், அரசியல்வாதிகள் மட்டத்திலும் கூட சற்று அதிருப்தி நிலைமை நீடிப்பதாகத் தெரிகின்றது.

மொத்தத்தில் தமது அரசியல் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க தாமும் குழப்பத்தில் இருக்கின்றமையோடு மட்டுமல்லாமல், தமது பக்கம் இருப்பவர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தி வைத்திருக்கின்றார் என்பதுதான் நிலைமை.




# அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் உண்ணாவிரதப் போராட்டம்

## பிரேமலதா நேரில் ஆதரவு

அ.தி.மு.க. சார்பில் கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணங்கள் குறித்து சரியான நடவடிக்கை எடுக்க தவறிய தி.மு.க. அரசை கண்டித்து சென்னை எழும்பூரில் நேற்று நடந்துவரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நேரில் சென்று ஆதரவு தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் விஷச் சாராயம் அருந்திய 63 பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரத்தில் அம்மாவட்ட ஆட்சியர் மற்றும் பொலிஸ் கண்காணிப்பாளர் ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் மதுவிலக்கு அமல் பிரிவு டி.ஜி.பி. மற்றும் பொலிஸ் கண்காணிப்பாளர் ஆகியோர் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், இவ்விவகாரம் தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என அ.தி.மு.கவினர் ஒவ்வொரு நாளும் அமளியில் ஈடுபட்டு பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். நேற்று முன்தினம் அமளியில் ஈடுபட்டதால் அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் அனைவரும் இத்தொடர் முழுவதும் பேரவையில் பங்கேற்காத வகையில் நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணங்கள் குறித்து சரியான நடவடிக்கை எடுக்க தவறிய தி.மு.க. அரசை கண்டித்தும், சி.பி.ஐ. விசாரணை நடத்த வலியுறுத்தியும் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தலைமையில் அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் அனைவரும் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கம் அருகில் நேற்று காலை 9 மணி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மைக் மற்றும் ஒலிபெருக்கிகளை பயன்படுத்த பொலிஸார் அனுமதி வழங்காத நிலையில், அனைவரும் அறவழியில் அமைதியாக உண்ணாவிரத போராட்டத்தில் பங்கேற்றனர். இங்கு அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் தனியாகவும் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் தனியாகவும் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அ.தி.மு.க. கூட்டணி கட்சியான தே.மு.தி.கவின் பொது செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் உண்ணாவிர போராட்டத்திற்கு நேரில் வந்து தனது ஆதரவை தெரிவித்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது,

“சி.பி.ஐ. விசாரணை நடத்தினால் தி.மு.கவின் முகத்திரை கிழியும் என்பதால் அதற்கு மறுக்கின்றனர். எதிர்கட்சிகளின் குரல்வளையை நசுக்க நினைத்தால் அடுத்த தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவர். 2026 இல் நிச்சயம் ஆட்சி மாறும். அ.தி.மு.க-தே.மு.தி.க. கூட்டணியில் நல்லாட்சி மலரும்.” -என்றார்

# திடீர் உடல் நலக்குறைவு காரணமாக அத்வானி மருத்துவமனையில் அனுமதி



பா.ஜனதா மூத்த தலைவர் எல்.கே.அத்வானிக்கு ஏற்பட்ட திடீர் உடல் நலக்குறைவு காரணமாக எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் துணைப் பிரதமரும், பா.ஜனதா மூத்த தலைவருமான எல்.கே. அத்வானிக்கு நேற்று முன்தினம் இரவு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத்தொடர்ந்து அவர் உடனடியாக சிகிச்சைக்காக, அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் (எய்ம்ஸ்) அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை அறிக்கை ஒன்றில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

96 வயதான பா.ஜனதா மூத்த தலைவரான எல்.கே. அத்வானிக்கு டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிறுநீரக துறையை சேர்ந்த மருத்துவர்கள் சிகிச்சை அளித்துள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது.

தற்போது அவரது உடல்நிலை சீராக உள்ளதாகவும், மருத்துவமனையில் முதியோர் பிரிவு சிறப்பு மருத்துவர்களின் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.






# பாகிஸ்தானில் வெப்ப அலை: 6 நாள்களில் 568 பேர் பலி!

பாகிஸ்தானின் தென்பகுதியில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.


கடந்த 6 நாள்களில் 568 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் கடந்த செவ்வாய்க்கிழமை மாத்திரம் 141 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

எனினும், உயிரிழந்த ஒவ்வொருவரின் மரணத்திற்கும் சரியான காரணங்களை உறுதிப்படுத்த தற்போது முடியாதுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், கராச்சியில் வெப்பநிலை 40 செல்சியஸ் (104 எப்) இற்கு மேல் உயர்ந்ததையடுத்து, அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

கராச்சி சிவில் மருத்துவமனையில் ஞாயிறு மற்றும் புதன்கிழமைக்கு இடையே 267 பேர் வெப்பப் பக்கவாதத்தால் அனுமதிக்கப்பட்டனர் எனவும் அவர்களில் 12 பேர் இறந்துவிட்டனர் என்றும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு பொறுப்பான வைத்தியர் இம்ரான் சர்வார் ஷேக் தெரிவித்துள்ளார்.

வெப்ப பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிப்புற வேலைகளில் ஈடுபடுபவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# கடந்த 24 மணித்தியாலங்களில் 47 பாலஸ்தீனியர்கள் கொலை

காசாவில் கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 47 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 57 பேர் வரை காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்தும் காசாவின் பல நகரங்கள் மீது வான்வழித் தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில், காசாவின் பல பகுதிகளில் உள்ள மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஆரம்பித்ததிலிருந்து தற்போது வரை 37 ஆயிரத்து 765 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 86 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.







# ஹோண்டுராஸ் முன்னாள் ஜனாதிபதிக்கு 45 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிப்பு

போதைப்பொருள் மற்றும் துப்பாக்கிச் சூடு தொடர்பான குற்றச்சாட்டின் பெயரில் ஹொண்டுராஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜுவான் ஆர்லாண்டோ ஹெர்னாண்டஸுக்கு 45 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பை அமெரிக்க நீதிபதி ஒருவர் நேற்று வழங்கினார்.

இதனையடுத்து 55 வயதான ஹெர்னாண்டஸ், அவர் எதிர்பார்க்கும் மேல்முறையீடு வெற்றிபெறும் வரை, தமது வாழ்நாள் முழுவதையும், சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மன்ஹாட்டன் நீதிமன்றம், கடந்த மார்ச் மாதம் அவரை குற்றவாளியாக அறிவித்தது.

கடத்தல்காரர்களுக்குச் சொந்தமான போதைப்பொருள் ஏற்றுமதிகளைப் பாதுகாப்பதற்காக மில்லியன் கணக்கான டொலர்களை இலஞ்சமாகப் பெற்றதற்காக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது

இந்தநிலையில், பிராதிவாதியின் சட்டத்தரணிகள், தமது கட்சிக்காரருக்கு ஆயுள் தண்டனையை கோரினர், எனினும் நீதிபதி அதனை நிராகரித்துள்ளார்.

# நேட்டோவின் புதிய தலைவராக நெதர்லாந்து பிரதமர் தெரிவானார்



நேட்டோ அமைப்பின் தலைவராக (செகரட்டரி ஜெனரல்) நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட்டே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

“நேட்டோ” எனப்படும் வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு, பெல்ஜியம் நாட்டின் தலைவர் பிரசெல்ஸ் நகரில் உள்ளது.

32 இற்கும் மேற்பட்ட நாடுகள் இவ்வமைப்பில் உறுப்பினராக உள்ளன. உறுப்பு நாடுகள் இணைந்த ஒரு இராணுவ அமைப்பான நேட்டோ அமைப்பின் தற்போதைய தலைவராக (செக்ரட்டரி ஜெனரலாக) ஜென்ஸ் ஸ்டோல்டன்பர்க் உள்ளார்.

எதிர்வரும் அக்டோபரில் இவரது பதவி காலம் நிறைவடைகிறது. இதைடுத்து புதிய தலைவர் பதவிக்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் போட்டியிட்டனர்.

இதில் அமெரிக்க ஆதரவு பெற்ற நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட்டே, நேட்டோ அமைப்பின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



# ஜனாதிபதி மதத் தலங்களுக்கு நேற்றுச் சென்று ஆசி பெற்றார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகையைத் தரிசித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

தலதா மாளிகைக்கு சென்ற ஜனாதிபதியை, தியவடன நிலமே உள்ளிட்ட விகாரை பஸ்நாயக்க நிலமேமார்கள் வரவேற்றனர்.

அதனையடுத்து தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதிக்கு மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஆசிர்வதித்தனர்.

இதன்போது கண்டி தலதா மாளிகையில் கலைஞர் அதுல ஹேரத்தினால் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அரசர் மற்றும் அரசியின் சிலைகளையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

அதனையடுத்து தலதா மாளிகையை தரிசிக்க வந்திருந்த பொது மக்களோடும் ஜனாதிபதி சிநேகபூர்வமாக உரையாடினார்.

அதன்பின்னர் மல்வத்து மகா விகாரைக்கு சென்ற

தொடர்ச்சி▼

















# ஜனாதிபதி மதத் தலங்களுக்கு நேற்றுச் சென்று ஆசி பெற்றார்

தொடர்ச்சி▲

ஜனாதிபதி மல்வத்து பீடத்தின் மகா நாயக்க தேரர் வண. திப்படுவாவே ஸ்ரீசுமங்கள தேரரை சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டார்.

அதனையடுத்து அஸ்கிரிய பீடத்தில் மகாநாயக்க வரகாகொட ஸ்ரீஞானரதன தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரிடமும் சிறிது நேரம் கலந்தாலோசித்தார்.

அதனைடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டி கட்டுகலை செல்வ விநாயகர் கோயிலுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். எஸ். கிருஷ்ணமூர்த்தி குருக்களினால் பூஜை வழிபாடுகள் நடத்தப்பட்டன.

அதனையடுத்து கண்டி மீரா மக்காம் பள்ளிவாசலுக்கும் ஜனாதிபதி விஜயம் செய்தார். மௌலிவ ஓ.எல்.எம். தாஸிம் துஆப் பிரார்த்தனை மேற்கொண்டார். அங்கிருந்தவர்களுடன் ஜனாதிபதி சிறிது நேரம் உரையாடினார்.

இதன்போது, அமைச்சர் மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, திலும் அமுனுகம, நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, மஹிந்தானந்த அலுத்கமகே, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தனர்.






















# மதிலை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் புகுந்த எரிபொருள் கொள்கலன் வாகனம்!

## சாரதியும் உதவியாளரும் காயம்

(ஹஸ்பர் ஏ.ஹலீல்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை – கண்டி பிரதான வீதியின் 98 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த எரிபொருள் கொள்வனவு வாகனமே இவ்வாறு வீட்டு மதிலை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றுள்ளது.

சாரதியின் நித்திரைக் கலக்கம் காரணமாக இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது.

இதில் எரிபொருள் கொள்கலனை செலுத்திய சாரதி வயது (50), உதவியாளர் வயது (45) ஆகிய இருவர் காயமடைந்துள்ளனர். இவர்கள் மதுகம பகுதியை சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது. இச் சம்பவம் குறித்த மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.






# நெடுந்தீவு மக்கள் சட்ட உதவிகளைப் பெறவும் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்கின்றனர்

## இலவச சட்ட உதவிகள் நடமாடும் சேவை நிகழ்வில் கருத்தாய்வு

**(த.சுபேசன்)**

நெடுந்தீவுப் பிரதேச மக்கள் தமக்கான சட்ட உதவிகளைப் பெற பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் பணிப்பாளரும், சட்டத்தரணியுமான அம்பிகா சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்பட்ட இலவச நடமாடும் சேவை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

நலன்புரி சேவைகள் உள்ளிட்ட அரச சலுகைகககளைப் பெற தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்கள் அவசியமானவையாகக் காணப்படுகின்றன.

அதனைவிட வழக்கு உள்ளிட்ட தேவைகளுக்கும் ஆவணங்கள் அவசியமானவையாக உள்ளன. அந்த வகையிலேயே எமது நிலையத்தால் நெடுந்தீவு பிரதேசத்தில் இலவச நடமாடும் சேவை மற்றும் சட்ட ஆலோசனை முகாம் ஆகியன முன்னெடுக்கப்படுகின்றன.

ஏனைய பிரதேச மக்கள் இலகுவாக பெறக்கூடிய சேவைகளைக் கூட தீவக மக்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே பெற முடிகிறது.

குறிப்பாக சட்ட உதவிகளைப் பெற பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஒரு சட்டத்தரணியை அணுகுவது கூட நெடுந்தீவு மக்களுக்கு சவால் நிறைந்த ஒன்று.

நீதிமன்றத்தை நாடுவதென்றால் கூட தீவக மக்கள் ஊர்காவற்துறைக்கே செல்ல வேண்டும். நெடுந்தீவில் சுற்றுலா நீதிமன்றம் உள்ள போதிலும் அது மாதத்திற்கு ஒரு தடவையே நடக்கின்றது. இதனால் மக்கள் நீதியைப் பெற போராட வேண்டிய தேவை உள்ளது. இவற்றை கருத்திற் கொண்டே சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையம் நெடுந்தீவில் இலவச சட்ட ஆலோசனை முகாமை ஏற்பாடு செய்ததுடன் தேவையுள்ள மக்களுக்கு இலவசமாக வழக்குத்தாக்கல் செய்யவும் தயாராக உள்ளது என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மஹிந்த சீனா பயணம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவிற்குப் பயணமாகியுள்ளார்.

சீன அரசாங்கத்தின் விசேட அழைப்பிற்கிணங்க அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் மேலும் 4 அதிகாரிகள் சீனா சென்றுள்ளனர் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்கள் 4 நாள்கள் இந்த விஜயத்தை முன்னெடுக்கவுள்ளனர்.







# மடுவில் 10 லட்சம் பக்தர்களை எதிர்பார்த்து ஜரூர் ஏற்பாடுகள்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட் & வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் யாத்திரிகள் ஸ்தலமாக விளங்கும் மடு அன்னையின் ஆடி மாதப் பெருவிழாவுக்கு பத்து லட்சம் பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்ப்பதால் அதற்கான எற்பாடுகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என மன்னார் மாவட்ட அர சாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

எதிர்வரும் 2 ஆம் திகதி மடு அன்னையின் பெருவிழாவையும் மடு அன்னைக்கு முடி சூட்டப்பட்ட யூபிலி ஆண்டையும் முன்னிட்டு மடு ஆலய கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

இதில் மன்னார் ஆயர் இம்மனுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார், மடு பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்கள மேம்பாட்டாளர்கள், பாதுகாப்பு படை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடல் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஊடகங்களுக்கு தொடர்ந்து கூறுகையில் –

மன்னார் மாவட்டத்துக்கு அடையாளமாக இருக்கின்ற மடுத் திருப்பதியின் பெருவிழாவை முன்னிட்டு நவ நாள்கள் உற்சவம் கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முக்கியமான இறுதிநாள் நிகழ்வுகள் ஜுலை மாதம் முதலாம், இராண்டாம் திகதிகளில் இடம்பெற இருக்கின்றன.

இந்த உற்சவத்தைச் சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கான இரண்டாவது கலந்துரையாடல் இன்று (நேற்று) வியாழக்கிழமை மடு ஆலயக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த ஆடிமாத பெருவிழாவை முன்னிட்டு சுமார் பத்து லட்சம் மக்கள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் இப் பெருவிழாவை சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த வகையில் இங்கு வருகின்ற பக்தர்களுக்குரிய பாதுகாப்பு ஒழுங்குகள் முப்படையினரும் இணைந்து செய்துள்ளனர்.

இத்துடன் இங்கு வருகின்ற மக்களுக்குரிய சுகாதாரம் தொடர்பாக இங்குள்ள வைத்தியசாலை வைதத்தியர்கள், பொது சுகாதார பரிசோதர்கள் யாவரும் இணைந்து முழு வீச்சிலான எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மடு ஆலய வளாகத்தில் நுளம்புத் தொல்லையிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்கு புகையூட்டல் செய்வதற்கான திட்டங்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் சனிக்கிழமையிலிருந்து இது செயற்படுத்தப்படும்.

மக்கள் நலன் கருதி மூன்று அம்புலன்ஸ்களுடன் வைத்திய துறைக்கான செயற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்களை ஒழுங்குபடுத்துவதற்கு முப்படைகளுக்கு மேலதிகமாக பாடசாலையிலிருந்து சாரணியர்கள் , மாணவர் படையணிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இத்துடன் குடிதண்ணீர் விநியோகம், மலசலகூட வசதிகள் போன்றவையும் சிறப்பான முறையில் எற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் மடு ஆலயம் வரும் பக்தர்கள் நலன் கருதி தனியார் , அரச மற்றும் ஓட்டோக்களும் போக்குவரத்துக்காக

தொடர்ச்சி▼

















# மடுவில் 10 லட்சம் பக்தர்களை எதிர்பார்த்து ஜூர் ஏற்பாடுகள்

தொடர்ச்சி▲

ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மடு பிரதேசம் ஒரு புனித பூமியாக இருப்பதால் ஆலயப் பகுதிக்குள் மதுபானம் அருந்துதலும் புகைத்தலும் தடை செய்யப்பட்டுள்ளன.

இவற்றை கட்டுப்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. உரிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

திடீர் தீ ஏற்படுமாகில் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான விடயங்களின் பங்குத் தாரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் முன்னேற்றங்கள் விடயமாகவே இன்று மடுவில் இடம் பெற்ற கலந்துரையாடலில் ஆராயப் பட்டது என மன்னார் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கூட்ட முடிவில் ஊட கங்களுக்கு தெரிவித்தார்.















# யாழ். ஊடக அமையத்தில் நினைவஞ்சலி

ஊடகவியலாளரும் மொழி பெயர்ப்பாளருமான ஜோசப் ஐயா என அழைக்கப்படும் வின்சன் புளோரின்ஸ் ஜோசப் அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் வியாழக்கிழமை அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது.

திருவுருவபடத்திற்கு அமரர் வின்சன் புளோரின்ஸ் ஜோசப்பின் துணைவியார் மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து ஈகைச் சுடரை 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் தலைவர் கோமகன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.





















# அம்புலன்ஸில் ஏற்றி அலைக்கழிக்கப்பட்ட நோயாளி உரிய சிகிச்சைக்கு முன் மரணம்

## செட்டிகுளம் வைத்தியசாலையில் உறவினர்கள் ஆதங்கம்

(கே.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம் வைத்திய சாலையிவ் இருந்து நோயாளியுடன் வவுனியா வைத்தியசாலைக்கு சென்ற அம்புலன்ஸை இடைநடுவே மீள செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அழைத்த நிலையில், அதில் இருந்த நோயாளரி செட்டிகுளம் வைத்தியசாலையில் மரணமடைந்தமையால் குழப்ப நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

மேற்படி சம்பவமானது நேற்று முன்தினம் தினம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

செட்டிகுளம் பிரதேசத்தை சேர்ந்த 60 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான திருநாவுக்கரசு ஆனந்தராசா என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நெஞ்சுவலி காரணமாக செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

இதன்போது, அவரது இரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வவுனியா பொது வைத்திய சாலையினர் நோயாளியை உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்குமாறு செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலைக்கு அறிவித்திருந்தனர் என இறந்தவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் மூலம் அந்த நோயாளியை மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

நோயாளர் அம்புலன்ஸ் புறப்பட்டு ஏறக்குறைய 15 கிலோமீற்றர் பயணத்தை மேற்கொண்டிருந்த நிலையில் மேலதிகமாக மேலும் ஒருவரை ஏற்றிச்செல்ல இருப்பதாகக் கூறி அந்த அம்புலன்ஸை மீண்டும் செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலைக்கு திரும்ப அழைத்துள்ளனர்.

தட்டான்குளத்தில் பயணித்துக் கொண்டிருந்த அம்புலன்ஸ் மீள செட்டிகுளம் வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் ஏற்கனவே அம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்டு திருப்பி கொண்டு வரப்பட்ட நோயாளி திருநாவுக்கரசு ஆனந்தராசா என்பவர் செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையிலே உயிரிழந்துள்ளார்.

மேலதிக சிகிச்சை வழங்கத் தமாதமானதாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என உறவினர்களும் அப்பிரதேச மக்களும் வைத்தியசாலை மீது குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் இறந்தவரின் உடல் நேற்றைய தினம் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு மரணவிசாரணை அதிகாரி கருணாநிதி ஹறி பிரசாத் முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்ற பின்னர், உடலை உறவினர்களிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவத்தால் செட்டிகுளம் வைத்தியசாலை பகுதி சற்று பதற்ற நிலையில் காணப்படுகிறது. இறந்தவரின் உறவினர்கள், கிராம மக்கள் தாங்கள் வைத்தியசாலைக்கு எதிராகப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளனர் எனத் தெரிவித்து வருகின்றனர்.



# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியை சேர்ந்த குலசிங்கம் வசீகரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சிறந்த தொழில் வாண்மைத்துவம் கொண்டகுலசிங்கம் வசீகரன் சமூக சேவை, கலை, இலக்கியத் துறைகளில் நீண்டகாலமாக ஈடுபட்டு வருபவர். இவர் சுமார்15 வருடங்களுக்கு மேலாக சிவில் விமான சேவை பிரிவில் அனுபவத்தை கொண்டுள்ளமையுடன் சுற்றுலாத்துறை சேவையிலும் ஈடுபட்டு வருகின்றார்.

பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட குலசிங்கம் வசீகரன் பல துறைகளில் அனுபவம் வாய்ந்தவர் என்பதுடன், தற்போது வடக்கு மாகாண ஆளுநரின் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர்களின் போராட்டத்தால் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு

தமது போராட்டத்தின் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதிபர் – ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்பு நேற்றும் நாடளாவிய ரீதியில் சுகவீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டது.

அதிபர் ஆசிரியர்களின் சுகவீன விடுமுறை தொழிற்சங்க போராட்டம் காரணமாக பாடசாலைகளில் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டது.

இதனிடையே, நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த கல்வி பொதுத்தராதர சாதரண தர பரீட்சையின் 2 ஆம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் மதிப்பீட்டாளர்கள் மற்றும் மதிப்பீட்டு நிலைய ஊழியர்களுக்கு இது தொடர்பில் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த மதிப்பீட்டு பணிகள் ஆசிரியர்களின் போராட்டம் காரணமாக பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# வவுனியாவில் மக்கள் குடிமனைக்குள் நாய்கள் காப்பகம் அமைக்க எதிர்ப்பு

## ஜீவகாருண்யம் காட்டிய பெண்ணுக்குச் சிக்கல்

(கே.வசந்தன்)

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் மக்கள் குடிமனைக்குள் நாய்களுக்கான காப்பகம் ஒன்றினை பெண் ஒருவர் அமைத்து வரும் நிலையில் கிராம மக்கள் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அந்தக் காப்பகத்திற்கு முன்னால் நேற்றுக் காலை திரண்ட கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயற்சித்தனர். எனினும் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் பொது மக்களுடன் கலந்துரையாடி முறைப்பாட்டினை பதிவு செய்து நிலைமையைச் சமாளித்தனர்.

நோர்வே நாட்டில் இருந்து வந்துள்ள பெண் ஒருவர் வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் மக்கள் குடிமனைகளின் மத்தியில் உள்ள வெற்று காணி ஒன்றில் நாய்களுக்கான காப்பகம் ஒன்றினை அமைத்து வருவதுடன், தற்போது கட்டக்காலியாக வீதிகளில் திரிந்த 42 நாய்களை அக்காப்பகத்தில் தங்க வைத்துள்ளார்.

இதனையடுத்து, அந்தக் காப்பகத்தினால் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், குடிமனைக்குள் நாய்கள் காப்பகத்தை அமைக்க யார் அனுமதி கொடுத்தார்கள் எனவும் தெரிவித்து அக்காப்பகத்தை மக்கள் இல்லாத பகுதியில் அமைக்குமாறு கோரி அக் கிராம மக்கள் காப்பகம் முன் ஒன்று கூடினர்.

அப்பகுதிக்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் மற்றும் மகறம்பைக் குளம் பொலிசார் பொது மக்களுடன் கலந்துரையாடினர். காப்பகத்தையும் பார்வையிட்டனர். அத்துடன் காப்பக உரிமையாளரிடம் காப்பகம் அமைப்பதற்கான அனுமதிகளை கேட்டிருந்தனர். எனினும் காப்பக உரிமையாளர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் சுகாதார பிரிவினர், கால்நடை வைத்தியர் ஆகியோரின் அனுமதியை பெறவில்லை என்பது இதன்போது தெரிய வந்தது. இதனையடுத்து புதிதாக நாய்களை கொண்டு வருவதை நிறுத்துமாறு அறிவுறுத்திய பொலிஸார், முறையான அனுமதி பெற்ற பின் நடத்துமாறு உரிமையாளருக்கு தெரிவித்தனர்.

பொதுமக்கள் நாய் காப்பகத்திற்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்தமையுடன் வவுனியா பிரதேச செயலகம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பவற்றும் முறைப்பாடு செய்து கடிதம் வழங்கியுள்ளனர்.












# இந்திய இழுவைமடிப் படகு மோதியதில் உயிரிழந்த கடற்படை வீரரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்றன

காங்கேசன்துறை கடற்பகுதியில் இந்திய இழுவைமடிப் படகு மோதியதில் காயமடைந்து உயிரிழந்த கடற்படை வீரரின் இறுதிக்கிரியைகள் நேற்று குருநாகலில் நடைபெற்றன.

காங்கேசன்துறை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களின் படகு ஆபத்தைத் தோற்றுவிக்கும் வகையில் மோதியதில் இலங்கைக் கடற்படை வீரர் கடந்த செவ்வாய் கிழமை உயிரிழந்தார்.

கடற்படையின் விசேட படகுகள் அணியின் உறுப்பினராகக் கடமையாற்றி வந்த 41 வயதான பிரியந்த ரத்நாயக்கே எனபவரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த மீனவ சங்கங்களை சேர்ந்த சிலர் கடற்படை வீரருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சென்றிருந்தனர்.

உயிரிழந்த கடற்படை வீரருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக யாழ்ப்பாணத்தில் அஞ்சலி பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் – மாதகல் வலி. தென்மேற்கு கூட்டுறவு சங்கத்தின் கடற்றொழில் அலுவலகத்தில் அந்த அஞ்சலி பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

குருநாகல் – இப்பாகமுவ பகுதியை சேர்ந்த இவர் 2004 ஆம் ஆண்டு கடற்படையில் இணைந்துள்ளமையுடன், சுழியோடிகள் பிரிவில் திறமையை வெளிப்படுத்திய வீரராவார்.

இந்திய மீன்பிடி படகு மோதி கடற்படை வீரர் உயிரிழந்த சம்பவத்தை கொலை என்ற ரீதியில் விசாரணை செய்து வருவதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்திருந்தார்.

மார்புப் பகுதியில் ஏற்பட்ட காயங்களினால் கடற்படை வீரர் உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கெப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.















# விடத்தல்தீவு 'இயற்கை சரணாலயத்தை' முடிவுறுத்துகின்ற வர்த்தமானிக்குத் தடை

## உயர்நீதிமன்றம் இடைக்காலமாக நேற்று விதித்தது

மன்னார் விடத்தல்தீவு இயற்கை சரணாலயத்தின் ஒரு பகுதியை விடுவித்து, வனஜீவராசிகள் அமைச்சர் சட்டத்தரணி பவித்ரா வன்னியாராச்சி வெளியிட்ட வர்த்தமானி நடைமுறைப்படுத்தப்படுவதை தடுத்து, உயர் நீதிமன்றம் நேற்று இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மன்னார் – விடத்தல்தீவு இயற்கை சரணாலயத்தின் ஒரு பகுதியை விடுவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானியை ஆட்சேபித்து பல சுற்றுச்சூழல் அமைப்புகள் தாக்கல் செய்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த மனுக்கள் உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை நிறைவு பெறும் வரை வர்த்தமானி நடைமுறைப்படுத் தப்படுவதை தடுத்து நீதியரசர்கள் குழாம் இடைக்கால தடை உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

விடத்தல் தீவு 'இயற்கை சரணாலயம்' என குறிப்பிடப்பட்டிருந்த பகுதி நிறைவுக்கு வருவதாக கடந்த மாதம் 6 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் சட்டத்தரணி பவித்ராதேவி வன்னியாராச்சிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உப ஆவணத்தில், விடத்தல் தீவு 'இயற்கை சரணாலயம்' என குறிப்பிடப்பட்டிருந்த பகுதி நிறைவுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட விடத்தல்தீவின் 400 ஏக்கரை இயற்கை சரணாலயத்தில் இருந்து விடுவிப்பதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

விடத்தல்தீவு கண்டல் தாவரங்களை அதிகளவில் கொண்ட பகுதியாக காணப்படுவதுடன், பறவைகள் சரணாலயமாகவும் அமைந்துள்ளது.

இறால் பண்ணைகள் கடல் அட்டை பண்ணைகள் போன்ற நீர் வேளாண்மையை முன்னெடுப்பதற்காக இயற்கை சரணாலயத்தின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 11 ஆம் திகதி தெரிவித்திருந்தார்.


மன்னார் விடத்தல் தீவு இயற்கை சரணலயத்தின் ஒரு பகுதியை விடுவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு சூழலியலாளர்கள் மற்றும் பொது அமைப்புகள் தொடர்ச்சியாக கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

# தாம் ஓய்வுபெற்றுள்ளார் என்பதை அறிவித்தார் சஞ்சய் ராஜரத்தினம்

சட்டமா அதிபர் பதவியிலிருந்து தாம் ஓய்வுபெற்றுள்ளார் என்று சஞ்சய் ராஜரத்தினம் தெரிவித்தார் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அவரது சேவைக்காலத்தை 6 மாதங்களுக்கு நீடிக்க ஜனாதிபதி பரிந்துரை செய்ததுடன், அந்த பரிந்துரைக்கு அரசமைப்பு பேரவை இரண்டு சந்தர்ப்பங்களில் அனுமதி மறுத்தது.

சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவை நீடிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் பரிந்துரை மேலதிக வாக்குகளால் நிராகரிக்கப்பட்டதையடுத்து, அது தொடர்பில் மீள ஆராய்வதற்காக அரச



மைப்பு பேரவை நேற்று முன்தினம் மாலை கூடியது.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு ஆரம்பமான கூட்டம் 4 மணித்தியாலங்கள் நீடித்துள்ளது.

60 வயது முழுமையடைந்ததன் பின்னர் சட்டமா அதிபரின் சேவை நீடிப்பை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரம் தமக்கு இல்லை என இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக அரசமைப்பு பேரவையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அதற்கமைய, சட்டமா அதிபர் தொடர்பான அரசமைப்பு பேரவையின் தீர்மானம் நேற்று முன்தினம் இரவே ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைக் கல்விச் செயற்பாடுகள் இன்று வழமை போன்று இடம்பெறும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு



அனைத்து அரச பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளும் இன்று வழமை போன்று இடம்பெறும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த இரண்டு நாள்களாக ஆசிரியர்கள், அதிபர்கள் முன்னெடுத்த சுகவீன விடுமுறை போராட்டம் வெற்றி அளித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# கடன் மறுசீரமைப்புத் தொடர்பான இணக்கப்பாடு பொருளாதார ஸ்திரப்படுத்தலுக்கு மிக அவசியம்

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

இலங்கை தனது கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையை நிறைவு செய்தமையானது, நாட்டின் பொருளாதார ஸ்திரப்படுத்தலுக்கான பயணத்தில் சாதகமான செயற்பாடாகும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

பொருளாதார மீட்சிக்கான பயணத்தின் முக்கிய மைல்கற்களான கடன் உடன்படிக்கைகளை நிறைவு செய்தல் போன்ற கடன் மறுசீரமைப்பு மற்றும் கடன் நிலைத்தன்மையை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காக இலங்கை மேற்கொண்டுள்ள முக்கிய நடவடிக்கை இதுவாகும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் வெளியக தனியார் கடன் வழங்குநர்களுடனான உடன்படிக்கைகளை இலங்கை அரசாங்கம் விரைவில் ஏற்படுத்திக்கொள்ளும் எனத் தான் எதிர்பார்க்கிறார் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதனிடையே, இலங்கையின் பிர தான பொருளாதார துறைகளில் நீண்ட கால முதலீடுகளை ஊக்குவிப்பதன் ஊடாக பொருளாதார மீட்சிக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பிற்கான இணக்கப்பாட்டை நிறைவு செய்துள்ளமை, இலங்கையின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் அதேபோன்று மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான பயணத்தின் முக்கிய மைல்கல்லாகும் என இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




பிரான்ஸ் மற்றும் ஜப்பானுடன் இணைந்து உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்கள் குழுவிற்கு இந்தியா இணைத்தலைமை வகித்தமையின் ஊடாக இலங்கையின் பொருளாதார ஸ்திரப்படுத்தல், மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்தியா வெளிப்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திற்கு இலங்கை தொடர்பில் உறுதிப்படுத்தலை வழங்கிய முதலாவது கடன்வழங்குநர் நாடு இந்தியா எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை பாதுகாப்பதற்கு இலங்கைக்கு இது வழிவகுத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கையின் கடன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இலங்கைக்கு ஆதரவளிக்க அதனுடன் தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு நிதி மறுசீரமைப்பு நடவடிக்கைளை முன்னெடுத்துச் செல்வதற்கும் சர்வதேச கடன் வழங்குனர்களின் ஆதரவை பெறுவதற்கும் முக்கியமான காரணியாக காணப்பட்ட கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கையுடன் தற்காலிகமாக உடன்பட்ட முதலாவது தரப்பு சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியாகும் என பெய்ஜிங் கில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சீன வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மாவோ நிங் சுட்டிக்காட்டியுள்ளார்.




# கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்தவர் ஜனாதிபதி

## ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வியின் முக்கியத்துவத்தை தெளிவாக உணர்ந்துள்ளமையாக், அதற்கான நிதியொதுக்கீடு உள்ளிட்ட விடயங்களில் கூடுதல் கரிசனையுடன் நடந்து கொள்கிறார் என ஆளுநர் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமேல் மாகாணத்தில் 1,671 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று குருநாகல் நகர மண்டபத்தில், ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் கூறியவை வருமாறு:-

இலங்கையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கும் கூட கடுமையான தட்டுப்பாடு நிலவியது. மின்சாரம் இன்றி மக்கள் மணிக்கணக்கில் அவதிப்பட்டார்கள். ஆனால் இன்று அந்த நிலை மாறியுள்ளது. அனைத்து அத்தியாவசியப் பொருள்களும், தட்டுப்பாடு இன்றி தாராளமாகக் கிடைக்கின்றன. வரிசை யுகம் மறைந்து நாடு ஓரளவுக்கு சுபீட்சமடைந்துள்ளது

மறுபுறத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள சுபீட்ச நிலை காரணமாக தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கான நிதியொதுக்கீடுகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாக தற்போது தொழில் வரிசைகள் உருவாகியுள்ளன.

அதன் ஒரு கட்டமாகவே இன்று உங்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாத



காலத்திற்குள்ளாக நாங்கள் நான்காயிரத்து இருநூறு பேருக்குப் பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை வழங்கியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் இன்னும் சிறிது காலத்திற்குள் தொழில் வரிசைகளும் இல்லாதொழிக்கப்படும். தகுதி வாய்ந்த அனைவருக்கும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதன் இன்னொரு கட்டமாக வடமேல் மாகாணத்தின் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் இன்னும் ஆயிரத்து ஐந்நூறு பேருக்கு விரைவில் ஆசிரியர் நியமனம் வழங்க உள்ளோம். அதற்கான வயது எல்லையை முப்பத்தி ஐந்தில் இருந்து நாற்பது வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாட்டின் எதிர்காலம் கல்வி கற்ற சமூகத்தின் கைகளில் தங்கியுள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வியின் முக்கியத்துவத்தைத் தெளிவாக உணர்ந்துள்ளார். அதன் காரணமாக கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளுக்குத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றார். அவரின் கல்விக் கொள்கையை அடியொற்றி, வடமேல் மாகாணத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

வடமேல் மாகாணத்தை , நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் முன்னணி மாகாணமாக முன்னேற்றுவதே எமது இலக்காகும். அதற்கான முக்கிய பொறுப்பு, இன்று பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெறும் உங்கள் கைகளில் தங்கியுள்ளது. எதிர்கால சந்ததியினரை , நாட்டின் எதிர்கால தலைவர்களை தயார்படுத்தும் பாரிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதனை உரிய முறையில் மேற்கொண்டு, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உரிய பங்களிப்பை வழங்க வேண்டும். மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் செயற்பட வேண்டும். - என்றும் ஆளுநர் நஸீர் அஹமட் தொடர்ந்தும் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் ராஜாங்க அமைச்சர்களான சாந்த பண்டார, அசோக பிரியந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான குருநாகல் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் சமன்பிரிய ஹேரத், புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் அமல் சிந்தக மாயாதுன்ன, அசங்க நவரத்ன, சுமித் உடுகும்புற, அலி சப்ரி ரஹீம், மாகாண பிரதம செயலாளர் தீபிகா குணரத்தின, மாகாண கல்வி அமைச்சு, பொதுச்சேவைகள் ஆணைக்குழு என்பவற்றின் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




# இன்றைய ராசி பலன்கள் - 28.06.2024




இன்று சிறப்பான நாளாக இருக்கக் காண்பீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை சுமூகமாக ஆற்ற வேண்டும். இதன் மூலம் வாழ்வின் நன்மை தீமைகளை அறிய இயலும்.

உங்கள் கடின உழைப்புக்கு மேலதிகாரிகளிடம் நன்மதிப்பு பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையுடன் மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படலாம்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். கணிசமான தொகை சேமிக்கும் வாய்ப்பு உள்ளது.




இன்று சற்றே அனுகூலம் குறைந்து காணப்படும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அதன் மூலம் தன்னம்பிக்கை இழக்காமல் இருக்க முடியும். சம்பவங்களை லேசாகவும் நகைச்சுவை உணர்வுடனும் எற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இதனால் கவலை ஏற்படும். சகபணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று கட்டுப்பாட்டை இழந்து காணப்படுவீர்கள். இதனை உ'ங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். அனுசரித்துப் போகும் அணுகுமுறை தேவை.

தேவையற்ற செலவுகளால் கையிருப்பு பணம் கரையும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும்.




இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையாது. சிறிய பயணம் மேற கொள்ள வேண்டியிருக்கும். இன்று தைரியமும் உறுதியும் குறைந்து காணப்படும். உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். அதிகப் பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வு மற்றும் மருட்சி காரணமாக உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகளை உதிர்ப்பீர்கள். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையுடன் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். பணம் சேமிப்பதையும் கடினமாக உணர்வீர்கள்.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி காண விழிப்புடனும் கவனமுடனும் இருக்க வேண்டும். யதார்த்தமான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளில் தவறுகள் ஏற்படாமல் இருக்க நீங்கள் மிகவும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகளை பேசுவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இதனை தவிர்த்தல் நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்திருக்கும். சிறந்த முடிவெடுக்கத்தக்க வகையில் உங்கள் மனநிலை சமநிலையில் இருக்கும்.

நீங்கள் உங்கள் உறுதியான மன நிலை காரணமாக பணியில் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் முழு ஆதரவைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பை வெளிப்படுத்தி பழகுவீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது. நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிட்டாது. இன்று சரியான முடிவெடுக்க மனதில் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம். நெருக்கமானவர்களுடன் உரையாடும்போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறாது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினைகள் ஏற்படும். வாக்குவாதங்கள் எழும். இதன் காரணமாக கருத்து வேறுபாடு ஏற்படும்.இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். வீட்டைப் புதுப்பிப்பதற்காக பணத்தை செலவு செய்ய வேண்டியிருக்கும். இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கி யத்தில் கவனம் தேவை. பிரார்த்தனை மேற்கொள்வது அமைதியை பெற்றுத் தரும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும்.இதனை தவிர்க்க வேண்டும். மனதில் தெளிவு ஏற்பட நம்பிக்கையுடன் செயல்பட வேண்டி யது அவசியம்.

பணியிடத்தில் குழப்பம் காரணமாக உங்கள் பணியில் தாமதங்கள் ஏற்படும். சக பணியாளர்கள் அதற்கு காரணமாக அமைவார்கள். எனவே திட்டமிட்டுக் கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். இதனால் இருவரிடையே இடைவெளி அதிகரிக்கும்.எனவே அத்தகைய போக்கை தவிர்த்து சகஜமாக இருக்க வேண்டும். இன்று பணவரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளும் பொறுப்புகளும் அதிகமாக காணப்படும்.




இன்று பொறுமையுடனும் கட்டுப்பாட் டுடனும் இருக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். இன்று தேவையற்ற வாக்குவாதங்களில் கலந்து கொண்டு உங்கள் மதிப்புக்குக் களங்கம் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணிகளைக் கையாளும்போது கவனமாக இருப்பது நல்லது. சக பணியாளர்களால் சில தொல்லை கள் ஏற்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இது உங்கள் இருவரிடையேயான உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும். இன்று பண வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். எனவே நஷ்டம் ஏற்படாமல் இருக்க திட்டமிட்டு சூழ்நிலையை சிறப்பாகக் கையாள வேண்டும்.

இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.06.2024




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் உங்கள் முன் இருக்கும் சவாலான சூழ்நிலைகளை கையாண்டு ஆறுதல் பெறுவீர்கள்.

இன்று பணியில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்று பொறுப்புடனும் யதார்த்த அணுகுமுறையுடனும் இருப்பீர்கள். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். இருவரும் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




உங்கள் லட்சியங்களை அடைவதற்கு இது ஏற்ற நாள். இன்று வெற்றியும் வளர்ச்சியும் காணப்படுகின்றது. இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் மன நிலையில் இருப்பீர்கள்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மறையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் தரமான நேரத்தை இருவரும் ஒன்றிணைந்து செலவிடுவீர்கள்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும். உங்கள் நிதிநிலைமை மேம்படும்.

இன்று ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது. நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று மிகவும் அனுகூலமான நாள். உங்கள் லட்சியங்களை அடைவதற்கான அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது. உங்களின் உற்சாகமான போக்கால் இன்று வெற்றி கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்க நேரலாம். புதிய வேலை வாய்ப்புகள் நிறைந்து காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உண்மையான உறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் தினசரி செயல்களை ஒழுங்கு முறையுடன் ஆற்ற வேண்டும். தியானம் அல்லது ஆன்மீக செயல்களுக்கு நேரம் ஒதுக்க முயன்றால் பலன் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டும். பணியிடப் பதற்றத்தை வீட்டுக்குக் கொண்டு செல்லாதீர்கள். இது குடும்ப அமைதியைக் கெடுக்கும்.

உங்கள் மனதில் காணப்படும் பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க இயலாது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் காணப்படும்.





